www.newwisdomministries.com

# ஞா
# ன
# ஒ
# லி





# கல்வித் தாய் சாரா டக்கர்

ஞானம் 6 – ஒலி 21 – 21.05.2023

# ஒரு நல்ல எண்ணம் கோடி பலன் தரும்





## தலையங்கம்

அருட்பணி.இ.சைமன் பீட்டர்,
ஆசிரியர் – ஞான ஒலி

அன்பிற்கினிய எனதருமை ஞான ஒலி மின்னிதழின் வாசகப் பெருமக்களே உங்கள் அனைவருக்கும் நம் அருள்நாதர் இயேசு கிறிஸ்துவின் அற்புத நாமத்தில் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கல்வி மானிடருக்கு உயிரைப் போன்றது. ஆறாவது அறிவை நமக்கு அறிமுகம் செய்து, அதனை ஆணிவேராகக் கொண்டு விருச்சமாக மனிதத்தை வளர்த்தெடுப்பது அக்கல்வியே. இறுதி மூச்சுவரை கற்கின்ற வாய்ப்பு பெற்றவர் பேறு பெற்றவராவர்.

இன்றைய தலையங்கத்தில் இங்கிலாந்தில் லண்டன் நகரத்தில் வாழ்ந்த ஜான் டக்கர், மற்றும் சாரா டக்கர் என்பவர்களைப் பற்றி உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

18ம் நூற்றாண்டில் வாழ்ந்த அவர்கள் சகோதர, சகோதரி. ஜான் டக்கர் ஒரு மருத்துவர். சாரா டக்கர் ஒரு மாற்றுத் திறனாளி. ஜான் டக்கர் இந்தியாவிற்கு வந்து திருநெல்வேலியில் மருத்துவப் பணி செய்து வந்தார். ஏழை எளிய மக்களுக்கு சேவை செய்து வந்தார்.

ஜான் டக்கர், ஒவ்வொரு வாரமும் தனது இந்திய அனுபவத்தையும், இந்தியர்கள், முக்கியமாக திருநெல்வேலி மக்களின் வாழ்க்கை முறைகளை கடிதம் மூலமாகத் தன் சகோதரிக்கு எழுதி வந்தார்.

ஒருமுறை ஜான் டக்கர் அவர்கள் ஒரு வீதி வழியாக தன் குதிரையில் ஏறி சென்றார். அப்போது அவருக்குத் தாகம் எடுத்தது. அப்போது ஒரு வீட்டின் கதவைத் தட்டினார். அங்கு ஒரு பெண் கதவைத் திறந்து அவரைப் பார்த்தவுடன் வீட்டுக்குள் ஓடி மறைந்து கொண்டார். அந்தப் பெண் ஏன் அவ்வாறு ஓடி ஒளிந்து கொண்டார் என்று அங்கிருந்த ஒருவரிடம் கேட்டபோது, பெண்கள் அந்நிய ஆண்களிடம் பேச மாட்டார்கள் அதனால் பெண்கள் வீட்டுக்குள்ளேயே இருப்பார்கள் என்று சொன்னார். மேலும், பள்ளியில் ஆண் ஆசிரியர்களிடம் கல்வி பயில வேண்டும் என்ற காரணத்தினால் அந்தப் பெண்கள் பள்ளிக்குச் செல்லமாட்டார்கள். பெண்கள் கல்வியற்று, வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக்கிடந்த அந்த அவலத்தையும்,

ஜான் டக்கர் தன் சகோதரிக்கு எழுதினார்.

மாற்றுத்திறனாளி சாரா டக்கர் இந்தியப் பெண்களின் இந்த அவலத்தைப் போக்க முடிவு செய்தார். அவர் தன்னிடம் இருந்த 24 சவரன் தங்கத்தைத் தன் சகோதரனுக்கு அனுப்பி ஒரு பள்ளிக் கூடம் ஆரம்பித்து அந்தப் பெண்களுக்கு கல்வியறிவைக் கொடுக்க உதவினார். அதன்படி 1843ம் ஆண்டு திருநெல்வேலியில் உள்ள சாரா டக்கர் பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. பெண்கள் கல்விப் பயில்வது எவ்வளவு முக்கியம் என்பதை பரப்புரை செய்ததால் பெண்கள் அதிகளவில் கல்வி கற்க ஆரம்பித்தார்கள். தொடர்ந்து 13 வருடங்கள் அவர்கள் பள்ளியை நடத்தினார்கள். அதன்பிறகு பொருளாதார நெருக்கடியால் அப்பள்ளியைத் தொடர்ந்து நடத்த முடியாததால், ஜான் டக்கர் அந்தப் பள்ளியை மூடிவிட்டார். அதைத் தன் சகோதரிக்குத் தெரியப்படுத்தினார்.

அதனால், மனமுடைந்த சாரா டக்கர் நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையானார். மரணப் படுக்கையில் இருந்த அவரை அவரின் தோழிகள் சந்தித்தபோது, தனது கனவான இந்தியப் பெண்களுக்கான கல்விப் பணியைத் தொடர்ந்து நடத்தமுடியவில்லையே என்ற வருத்தத்தைத் தெரிவித்தார். அந்த வேதனையிலேயே அவர் 1857ம் ஆண்டு இறந்துபோனார்.

அவரது தோழிகளான மரியா, சோஃபியா, ஜோன்வா மூவரும் இணைந்து மக்களிடம் வசூல் செய்து 811 பவன் தங்கத்தை ஜான் டக்கருக்கு அனுப்பினார்கள். அதைக் கொண்டுதான் சாரா டக்கர் பள்ளியையும், சாரா டக்கர் கல்லூரியையும் ஆரம்பித்தார்கள்.

திருநெல்வேலி மற்றும் பாளையங்கோட்டைப் பகுதியில் வாழ்ந்த பெரும்பாலான மாணவ மாணவிகள் இந்தக் கல்வி நிறுவனங்களில்தான் படித்திருக்கின்றார்கள். மூன்று தலைமுறையாக இதுவரை 10 லட்சத்திற்கும் அதிகமானவர்கள் படித்திருக்கின்றாரகள்.

அங்கு படித்த யாரைக் கேட்டாலும் தாங்கள் STC யில் படித்ததாகத்தான் சொல்வார்கள். இன்று அந்தப் பகுதி மக்கள் பெரும் கல்வி அறிவு பெற்றவர்களாய் இருக்கின்றார்கள் என்றால், அந்த சகோதரியும், சகோதரனின் தன்னலமற்ற சேவைதான் காரணம்.

இன்று அவர்கள் இல்லை, ஆனால், இறவாப் புகழ் அடைந்திருக்கின்றார்கள். இதுதான் அவர்கள் பெற்ற நித்திய வாழ்வு. அவர்களின் பூத உடல் அழிந்திருந்தாலும், இந்த மண் இருக்கும் வரை அவர்களின் பெயரும் நினைவும் நீங்காதிருக்கும்.

இதுதான் மனிதநேயம். அது ஒருவருக்குள்ளேயே தங்கிவிட்டால், அது சுயநலம். அந்தத் தேக்கம், விஷமாகி யாருக்கும் பயன்தராது. ஒருவன் உலகமனைத்தையும் தனக்குள்ளே ஒளித்து வைத்தால் அது இருளாகும்.

உண்மையான அன்பு தனக்குள்ளே தங்காது, அது வெளியேறினால்.. .உலகமனைத்தையும் வெளிச்சமாக்கும், அதற்குப் பெயர்தான் அன்பு. அது நாடு, இனம், மொழி அனைத்தையும கடந்து பிறரை நோக்கிப் பயன்தரும். நீர் வீழ்ச்சியைப் போல, ஆற்றைப்போல தேவைப்படும் இடங்களை நோக்கி பாயும். தண்ணீர் செல்லும் இடத்தையெல்லாம் வளமாக்குவது போல, அன்பு அனைத்தையும் வாழ வைக்கும்.

சாரா டக்கர், ஜான் டக்கர் இருவரும் இந்த ஏழை மக்களின் கல்விக்காகவே பிறந்தார்கள். ஆகவேதான் இறைவன் ஜான் டக்கரை திருநெல்வேலிக்கு வரவழைத்தார்...அவர்களின் இறைப்பணி செவ்வனே நிறைவேறியது.

நம்மையும் அப்படிப்பட்டதொரு பணிக்காக இறைவன் அழைத்திருக்கலாம். அது என்ன? அந்த உயிர் ரகசியத்தைக் கண்டுபிடிப்போம்.

# விவிலியம் அறிவோம்





இஸ்ரயேல் கூட்டமைப்பில் சிறிதுகாலம் அல்லது வாழ்க்கை முழுவதும் கடவுளின் பணிக்காக ஒருவர் தன்னை அர்ப்பணிக்கமுடியும். அவ்வாறு கடவுளுக்காகத் தன்னை அர்ப்பணிப்பவர் நாசிர் என அழைக்கப்பட்டார். விவிலியத்தில் வருகின்ற முக்கியக் கதாபாத்திரங்களான சிம்சோன் (நீத 13:4-5) மற்றும் சாமுவேல் (1 சாமு 1:11, 22) ஆகியோர் வாழ்நாள் முழுமைக்கும் நாசிர்களாக அர்ப்பணிக்கப்பட்டவர்கள். எண்ணிக்கை நூல் ஆறாவது பிரிவு நாசிர் பொருத்தனைப் பற்றிப் பேசுகிறது. மேலே குறிப்பிட்டபோல ஒரு குறிப்பிட்ட காலம் மட்டும் ஒருவர் நாசிராக வாழலாம் அல்லது வாழ்க்கை முழுவதும் நாசிராக இருக்கலாம். எண் 6வது பிரிவு தற்காலிக நாசிர் பொருத்தனை செய்பவர்களைப் பற்றிப் பேசுகிறது. நாசிர் பொருத்தனையை ஆண், பெண் ஆகிய இரு பாலாரும் செய்து கொள்ளலாம். இது சிறப்புக்குரிய ஒன்றாக உள்ளது. ஏனெனில் விவிலியத்தில் ஆணோ பெண்ணோ என்ற சொற்றொடர் மிகவும் குறைவான இடங்களில் மட்டுமே வருகிறது (காண்கவிப 21:28-29; லேவி 13:29, 38; 20:27; எண் 5:6; இச 17:2, 5; 29:17).

இந்தப் பிரிவில் நாசிர் என்ற சொல் இருபத்து நான்கு தடவைகள் வருகின்றன. இதன் வேர்ச்சொல் நசர என்பதாகும். இதன் பொருள் ஒதுக்கப்பட்ட அல்லது தனிமைப்டுத்தப்பட்ட என்பதாகும். நாசிர்கள் ஆண்டவருக்காக ஒதுக்கப்பட்டவர்கள். அவருக்காகத் தனிமைப்படுத்தப்பட்டவர்கள். நாசீர் பொருத்தனை செய்தவர்களுக்கு மூன்று தடைகள் விதிக்கப்பட்டிருந்தன. முதலாவது, அவர்கள் திராட்சையிலிருந்து தயாரிக்கப்படும் எதுவும் உண்ணவோ, குடிக்கவோ கூடாது. திராட்சை இரசம், மது ஆகியவற்றை அவன் விலக்கவேண்டும்; திராட்சை இரசம், மது ஆகியவற்றின் காடியை அருந்தக்கூடாது. திராட்சைப்பழச் சாற்றைக் குடிக்கக் கூடாது. திராட்சைப் பழங்களையோ,

வற்றலையோ உண்ணவும் கூடாது. பொருத்தனைக் காலம் முழுதும் திராட்சைக் கொடியிலிருந்து கிடைக்கும் எதையும், விதைகள், தோல்களைக் கூட, அவன் உண்ணக்கூடாது (எண் 6:3-4) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாவது, சவரக்கத்தி அவன் தலையில் படக்கூடாது. அர்ப்பணம் செய்துகொண்ட பொருத்தனைக் காலம் முழுதும் சவரக்கத்தி அவன் தலையில் படக்கூடாது; ஆண்டவருக்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட காலம் முடியுமட்டும் அவன் தூய்மையுடன் இருப்பான்; அவன் தன் தலைமுடியை நீளமாக வளரவிடுவான் (எண் 6:5). மூன்றாவதாக, பிணத்தருகே போகக்கூடாது. ஆண்டவருக்கென்று தன்னை அர்ப்பணித்துக்கொண்ட காலம் முழுதும் பிணத்தருகே அவன் போகக்கூடாது. தன் தந்தை, தாய், சகோதரன், சகோதரி இறந்தால்கூட அவர்களுக்காகத் தன்னைத் தீட்டுப்படுத்தக்கூடாது (எண் 6:6-7)எனக் குறிப்பிடப்படுகிறது. நாசிர் பொருத்தனை செய்பவர்களுக்கு ஏன் இந்தத் தடைகள் விதிக்கப்படுகின்றன என்ற கேள்வி நம்மில் எழலாம்.

பயிர்த்தொழில் செய்து வாழ்ந்தவர்கள் திராட்சை மது அருந்துவது வழக்கமாக இருந்தது. போதை தலைக்கேறும்வரை அவர்கள் குடித்தார்கள். குறிப்பாக, கானானியர்கள் நடுவில் இந்தப் பழக்கம் அதிகமாக இருந்தது. இஸ்ரயேல் மக்கள் ஆடுமாடுகளை மேய்த்து நாடோடிகளாக வாழ்ந்தவர்கள். வாக்களிக்கப்பட்ட நாட்டில் குடியேறும்போது அவர்களும் பயிர்த்தொழிலில் ஈடுபடுவார்கள். கானானியர்களின் பழக்க வழக்கங்கள் அவர்களிடம் வரக்கூடாது. அதிலும் சிறப்பாக ஆண்டவருக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களிடம் அந்தப் பழக்கம் இருக்கக்கூடாது. பயிர்த்தொழில் செய்பவர்களின் பழக்க வழக்கங்களை கூறை கூறுபவர்கள் மூதாதையான நோவா பயர்த்தொழில் செய்யத் தொடங்கித் திராட்சைத் தோட்டம் அமைத்தபோது நடந்த நிகழ்வைச் சுட்டிக்காட்டுவார்கள் (தொநூ 9:20-27).நோவா, திராட்சை இரசத்தைக் குடித்துப் போதைக்குள்ளாகித் தம் கூடாரத்தில் ஆடை விலகிக் கிடந்தார். தன் தந்தையின் திறந்த மேனியை நோவாவின் இளைய மகனாகியகாம் கண்டதால் கானான் சபிக்கப்படுகிறான். நாசிர்கள் திராட்சை இரசம் அருந்துவதைத் தவிர்ப்பதால் யாவே கடவுளுக்கு உண்மை உள்ளவர்களாக இருக்கமுடியும்.

இஸ்ரயேல் மக்கள் நடுவில் யாவே கடவுளுக்கு உண்மை உள்ளவர்களாக இருப்பதற்காகத் திராட்சை இரசம் பருகாமல் வாழுகின்ற இன்னொரு குழுவினரையும் இங்கே நினைவுகூர்வது நல்லது. அவர்கள் இரேக்காப்பியர்கள் என அழைக்கப்பட்டார்கள். இவர்கள் இரேக்காபின் மகனான யோனதாபு என்பவரின் வழிமரபினர். யோனதாபு உயிருடன் இருந்தபோது அவரது வழிமரபினருக்குக் கீழ்வரும் கட்டளையைக் கொடுத்தார்: நீங்களோ உங்கள் மக்களோ என்றுமே திராட்சை இரசம் பருகலாகாது. வீடு கட்டிக்கொள்ளவோ, விதை விதைக்கவோ, திராட்சைத் தோட்டம் நடவோ அதை உடைமையாக்கிக் கொள்ளவோகூடாது. மாறாக, நீங்கள் தங்கியிருக்கும் இந்நிலத்தின் கண்

நெடுநாள் வாழும் பொருட்டு,உங்கள் வாழ்நாள் முழுவதும் கூடாரங்களில் குடியிருங்கள் என்பது அந்தக் கட்டளை. யோனதாபு கி.மு. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். யஸவே கடவுள் மீது கொண்ட பற்றினால்,யாவே கடவுள் செய்த உடன்படிக்கைக்கு என்றும் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக இந்தக் கட்டளைகளைக் கொடுக்கின்றார். தங்கள் மூதாதையான யோனதாபுவின் கட்டளைகளுக்கு இரேக்காபியர்கள் உண்மை உள்ளவர்களாக இருந்தார்கள். பல நூற்றாண்டுகள் சென்றபின்பும் இந்தக் கட்டளைகளைப் பின்பற்றினார்கள்; அதிலிருந்து விலக அவர்கள் விரும்பவில்லை என்பதை எரேமி 35வது பிரிவில் நாம் வாசிக்கிறோம்.

இரண்டாவதாக, தலைமுடி ஒரு மனிதனின் உயிர்ச்சக்தியின் நீட்சியாகக் கருதப்பட்டது. தலைமுடியைச் சிரைக்காமலிருப்பது ஆற்றலைப் பாதுகாக்கும் ஒரு வழியாகக் கருதப்பட்டது. உதாரணமாக சிம்சோனின் கதையைக் குறிப்பிடலாம் (நீத 16:17-20). சிம்சோன் பிறப்பிலேயே ஒரு நாசிராக கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர். அவரது அர்ப்பணமும் ஆற்றலும் தலைமுடியோடு தொடர்புடையதாக இருந்தது. எனவே தலைமுடியை கடவுளுக்கு அர்ப்பணிப்பது ஒருவன் தன்னுடைய உயிரைக் கடவுளுக்கு அர்ப்பணிப்பதாகப் பார்க்கப்பட்டது. மூன்றாவதாக, ஒருவன் ஆண்டவருக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட காலம் முழுவதும் பிணத்தருகே போகக்கூடாது என்ற விலக்கு கட்டாயமாகக் கடைபிடிக்கப்படவேண்டிய ஒன்றாகும். பண்டைய மேற்காசிய நாடுகளில் இறந்த முன்னோர்களை வழிபடுவது வழக்கமாக இருந்தது. இந்த முன்னோர் தெய்வங்களாக மாறிவிட்டனர் என அவர்கள் நம்பினர்; எனவே அவர்களை வழிபட்டார்கள். ஆண்டவருக்கு அர்ப்பணமானவர்கள் பிணத்தருகே போகக்கூடாது என்ற விலக்கு இறந்த முன்னோர் வழிபாட்டிற்கு எதிரான ஒன்றாகும். பண்டைய இஸ்ரயேல் மக்கள் உயிர்த்தெழுதலில் நம்பிக்கைக் கொண்டிருக்கவில்லை. இறந்தவர்களை மனித சமூகத்தின் ஒரு அங்கமாக அவர்கள் கருதவில்லை. எனவே இறந்தவர்கள் தெய்வங்கள் ஆகிவிட்டனர், அவர்களை வழிபடவேண்டும் என்ற கோட்பாடுகளை அவர்கள் ஏற்கவில்லை. தூய்மை வாழ்வோடு தொடர்புடையது. இறப்பிற்கும் தூய்மைக்கும் எந்தத் தொடர்புமில்லை. எனவேதான் நாசிர் பொருத்தனை செய்பவர்கள் பிணத்தின் அருகில் செல்வதைத் தவிர்க்கவேண்டும்.

நாசீர் பொருத்தனை செய்தவர்கள் அர்ப்பண காலம் நிறைவுறும் வேளையில் ஒரு நீண்ட சடங்கைப் பின்பற்ற வேண்டிய அவசியம் இருந்தது. அர்ப்பணகாலம் முடிந்ததும்; அவர்கள் சாதாரண வாழ்க்கைக்குத் திரும்ப முடியாது. முதலில் அவர்கள் தூய்மைச் சடங்குகளில் கலந்துகொள்ள வேண்டும். ஆண்டவருக்காக நேர்ச்சைப் பொருள்கள் கொண்டுவரவேண்டும். பலிக்காகப் பழுதற்ற ஓராண்டு செம்மறிக்கிடாய் ஒன்று, பாவ நீக்கப் பலிக்காகப் பழுதற்ற ஓராண்டு ஆட்டுக்குட்டி ஒன்று, நல்லுறவுப்

பலிக்காகப் பழுதற்ற ஆட்டுக்கிடாய் ஒன்று மற்றும் புளிப்பற்ற அப்பம் ஒரு கூடை, எண்ணெயில் மெல்லிய மாவைப் பிசைந்து செய்த நெய்யப்பங்கள், எண்ணெய் தடவிப் புளிப்பற்ற மாவால் செய்த அடைகள், அவற்றின் உணவுப் படையல், நீர்மப் படையல் ஆகியவை கொண்டுவரப்பட்டு குருக்களிடம் ஒப்படைக்கவேண்டும். குருக்கள் அந்தப் பலிகளையும் படையல்களையும் ஒப்புக்கொடுப்பர். உணவுப் படையலும் நீர்மப் படையலும் கடவுளோடு உள்ள உறவை வெளிப்படுத்தும் அடையாளங்களாக இருக்கும். மேற்கூறப்பட்ட பலிகளும் படையல்களும் ஒப்புக்கொடுக்கப்பட்ட பின் நாசிர் புனிதப்படுத்தப்பட்ட தன் தலையைச் சந்திப்புக் கூடார நுழைவாயிலில் மழித்து, புனிதப்படுத்தப்பட்ட தன் தலைமுடியை எடுத்து நல்லுறவுப் பலியின் அடியில் இருக்கும் நெருப்பில் போடுவான். அதன்பிறகுதான் ஒரு நாசிர் சதாரணமான வாழக்கைக்குத் திரும்ப முடியும். நாசிர் பொருத்தனை செய்தவர்கள் இந்த விலக்குகளை மீறினால், அல்லது எதிர்பாராதவிதத்தில் மீறவேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்டால் அவர்கள் ஏழு நாள்களுக்கு தூய்மைச் சடங்கில் பங்கெடுக்கவேண்டும். அவனுடைய தலையையும் சிரைத்துக்கொள்ளவேண்டும்; அர்ப்பணத்தின் அடையாளம் தலையில் உள்ளது; அவனுடைய அர்ப்பணம் முறிந்துவிட்டதால் அவனது தலையும் தீட்டுபடுத்தப்பட்டுவிட்டது (எண் 6:9-12). மேலும் அர்ப்பணகாலம் நிறைவுறும் வேளையில் செய்யவேண்டிய சடங்குகள் அனைத்தும் விலக்குகளை மீறியவர்களும் செய்யவேண்டும். அதன்பிறகு அவர்கள் மீண்டும் நாசிர் பொருத்தனை செய்து தங்கள் அர்ப்பணத்தைப் புதுப்பிக்கலாம்.

நாசிர் பொருத்தனைக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சடங்கு முறைகளும் ஆடம்பரமாக அவற்றைச் செய்யும் முறைகளும் நாசிர் பொருத்தனையின்; முக்கியத்துவத்தையும், புனிதத்துவத்தையும் உணர்த்துவதாக உள்ளது. பிணத்தின் அருகில் செல்லக்கூடாது என்ற கட்டளைகுருக்களுக்குக் கொடுக்கப்பட்ட விலக்கைவிட கடினமானதாக இருக்கிறது. (லேவி 21:1-4). அது தலைமைக் குருக்களுக்கு விதிக்கப்பட்ட விலக்குகளுக்கு ஒத்ததாக உள்ளது (லேவி 21:11). கடவுளின் மக்கள் நடுவில் தூய்மைக்கு எடுத்துக் காட்டான ஒரு குழுவாக, புனிதத் தன்மை மிகுந்தவர்களாக நாசிர்கள் இருந்தனர். இஸ்ரயேல் ஒரு கூட்டமைப்பாக மாறிய காலத்திலேயே உருவான நாசிர்கள் தொடர்ந்து இஸ்ரயேலில் வாழ்வதைப் பார்க்கிறோம். மன்னராட்சி காலத்தில் இவர்கள் இறைவாக்கினர்களுக்கு இணையானவர்களாகக் கருதப்பட்டவர்கள் என எண்ணமுடிகிறது. யஹவே கடவுளே நாசிர்களை எழச்செய்கிறார் என இறைவாக்கினர் ஆமோஸ் கூறுகிறார்: உங்கள் புதல்வர்களுள் சிலரை இறைவாக்கினராய் உயர்த்தினேன்; உங்கள் இளைஞர்களுள் சிலரை நாசீர்களாய்த் தேர்ந்துகொண்டேன்; இஸ்ரயேல் மக்களே, இது உண்மையன்றோ? (ஆமோஸ் 2:11-12) என ஆண்டவர் கேட்பதாக ஆமோஸ் குறிப்பிடுகிறார். நாசிர்களை

இறைவாக்கினர்களுக்கு இணையானவர்களாகக் காட்டுவதன் வழியாக இஸ்ரயேல் சமூகத்தில் நாசிர்கள் முக்கிய இடத்தைக் கொண்டிருந்தார்கள் என்பது தெரிகிறது. மக்கள் நடுவில் அவர்கள் கடவுளுக்காக அர்ப்பணிக்கப்பட்டவர்களாக, அவருக்காக எதையும் செய்யத் தயாரானவர்களாக இருந்தார்கள்.

விவிலிய இடைக்காலத்திலும் நாசிர்கள் இருந்தார்கள். கிரேக்கக் கலாச்சாரத் திணிப்பிற்கு எதிரான போராட்டத்தில் மக்கபேயர்களுடன் நாசிர்களையும் நாம் பார்க்கிறோம். குறிப்பாக யூதா மக்கபேயின் தலைமையில் யூதர்கள் செலூக்கியர்களுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டபோது நாசிர்களும் கலந்துகொள்கிறார்கள். இயேசுவின் காலத்திலும் நாசிர்கள் இருந்தார்கள் என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. குறிப்பாக, எருசலேம் கோவில் பெரிய முற்றத்தில் நாசிர்களுக்கென ஒரு மூலையில் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. மேலும் பல அறிஞர்களின் பார்வையில் பாலைவனத்தில் பணிசெய்த திருமுழுக்கு யோவான் ஒரு நாசிராகத் தன்னை கடவுளின் பணிக்காக அர்ப்பணித்தவர். ரபிக்களின் இலக்கியமான மிஸ்னாவிலும் நாசிர்களைப் பற்றி ஓர் ஆய்வுக்கட்டுரை உள்ளது. திருத்தூதர் பவுலும் அவருடன் இணைந்து பொருத்தனை செய்திருந்த நான்கு இளைஞர்களும் எருசலேம் கோவிலில் முடிவெட்டி தூய்மைச் சடங்குகள் செய்கின்றனர் (திப 18:18; 21:23-26). இவர்கள் செய்திருந்த பொருத்தனை நாசிர் பொருத்தனையாக இருக்கலாம எனவும் அறிஞர்கள் கருதுகின்றனர். இவ்வாறு இஸ்ரயேலின் சமய வாழ்வில் நாசிர் என்றொரு பிரிவினர் நீண்டகாலம் செயல்பட்டு வருவதை நாம் காண்கிறோம்.

பயணம் தொடரும்,

அருட்பணி ஆ. அலெக்ஸ்.cmf



# ஞாயிறு மறையுரை



அருட்பணி.ஆரோக்கிய யூதா ததேயு
பங்குத்தந்தை, திருஇருதய ஆண்டவர் ஆலயம், ஈரோடு ரயில்வே காலனி, கோவை மறைமாவட்டம்

## ஆண்டவரின் விண்ணேற்புப் பெருவிழா ஞாயிறு

**21.05.2023**

**திருத்தூதர் பணிகள் 1/1-11 - எபேசியர் 1/17-23 - மத்தேயு 28/16-20**

அன்பார்ந்த இறைமக்களே!

உயிர்ப்பு பெருவிழா வாழ்த்துக்களும், வணங்கங்களும். இன்று தாய்த் திருச்சபை விண்ணேற்பு பெருவிழாவைக் கொண்டாட அழைப்பு விடுக்கின்றது. நாம் இன்று கொண்டாடும் விண்ணேற்பு பெருவிழா, இரண்டு விதமான நம்பிக்கைகளை நமக்கு வழங்குகின்றது. ‘உயிர்த்த ஆண்டவர் மீண்டும் வருவார்’ என்பதும், ‘தூய ஆவியானவரின் அருள்பொழிவிற்காகக் காத்திருங்கள், செபியுங்கள்’ என்பதும் இந்த விழா நமக்கு வழங்குகின்ற இரு பெரும் நம்பிக்கைகள். இந்த இரண்டு வாக்குறுதிகள் வானதூதர்களும், ஆண்டவர் இயேசுவுமே நமக்கு கொடுத்த வாக்குறுதிகள். எனவே, சந்தேகம் எதுவும் இன்றி இந்த வாக்குறுதிகளை நாம் ஏற்றுக் கொள்ளலாம். நமது விசுவாச வாழ்வினைப் புத்துணர்வோடு தொடரலாம்.

பள்ளியில் பயிலும் ஒரு மாணவனுக்கு ஆசிரியர் ஆண்டின் இறுதியில் ‘தேர்ச்சி பெற்றார்’ என்ற தருகின்ற பாராட்டு, அந்த மாணவனுக்கு மகிழ்ச்சியினையும், அடுத்த வகுப்பில் இன்னும் ஊக்கத்தோடு படிக்கின்ற மனநிலையையும் தருகின்றது. அவரின் வயதைவிட இளையவர்களாக இருக்கின்ற மாணவர்களுக்கும், ‘படித்தால் தேர்ச்சி’ என்று உறுதியை, செய்தியைத் தருகின்ற ஒன்றாக இருக்கின்றது.

அதுபோல நாம் இன்று கொண்டாடும் விண்ணேற்பு விழா என்பது, நம் ஆண்டவர் இயேசுவின்

கீழ்ப்படிதலுக்கும், பணிவாழ்விற்கும், மீட்புச் செயலுக்கும், அதாவது பாடுகள் – மரணம் – உயிர்ப்பு என்கின்ற மறையுண்மைக்கு தந்தையாகிய இறைவனால் கொடுக்கப்பட்ட ஒரு வெகுமதியாக விளங்குகின்றது. அதுமட்டுமல்ல, ஆண்டவர் இயேசு உயிர்த்த 40-ம் நாள் விண்ணேற்றம் அடைந்தது, நமக்கு வானக வீட்டினை ஏற்பாடு செய்வதற்காகவும், அவர் சென்றால்தான் தூய ஆவியானவர் வருவார் என்கிற, தொடரும் செயல்பாட்டின் முன் செயலாகவும் அமைந்திருக்கின்றது.

எனவே, விண்ணேற்பு விழா நமது கிறிஸ்தவ வாழ்க்கையில் கீழ்கண்ட பலவிதமான படிப்பினைகளை, வழிகாட்டுதல்களை தருகின்றது.

1. மீட்புச் செயல் என்பது, நமது வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் சோதனைகள், துன்பங்கள் மற்றும் அதற்குப் பலனாகத்தான் விண்ணேற்பு மகிமை கிடைக்கும் என்கிற உண்மை. ஆக, துன்பமின்றி மகிழ்ச்சியில்லை, தியாகம் இன்றி மகிமை இல்லை.



2. உயிர்த்த ஆண்டவரின் சாட்சிகளாக வாழ்தற்கான உன்னத அழைப்பு திருமுழுக்கு வழியாக நமக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. எனவே, உலகம் முடியும்வரை, சாட்சிய வாழ்வின் வழியாக, இயேசுவின் நற்செய்தி மதிப்பீடுகளை பிறருக்கு வழங்குகின்ற கடமையை இது நமக்கு நினைவூட்டுகின்றது. ஆக, உயிர் மூச்சு உள்ளவரை, சான்று பகர்ந்து வாழ்வோம்.

3. இறுதியாக, ஆண்டவரின் வருகையின் நாள் வரை, நமது நம்பிக்கையில் குறைவுபடாதிருக்க, இடையறாது செபிக்க வேண்டியதன் இன்றியமையாத கடமையை இது நமக்கு நினைவூட்டுகின்றது. ஆக, செப உறவில், இறை உதவியைக் காண்போம்.


எனவே, இன்று இந்த விழாவினைக் கொண்டாடுகின்ற நாம், இந்த தியானச் சிந்தனைகளை ஏற்று, நமது வாழ்வினை வாழ இறையருள் வேண்டி, தொடர்ந்து மன்றாடுவோம். உயிர்த்த ஆண்டவரின் வல்லமையும், பாதுகாவலும் உங்களோடு இருக்கட்டும். ஆமென்.



# ஆண்டவரின் விண்ணேற்றப் பெருவிழா

தி.ப. 1:1-11, எபே. 1:17-23, மத். 28:16-20

**21-05-2023**



பா. சேவியர்
திண்டுக்கல்

## திருப்பலி முன்னுரை

தீய மனச் சான்றிலிருந்து விடுவிக்கப்பட்ட உள்ளமும், தூய நீரில் கழுவப்பட்ட உடலும் உடைய வர்களாய் வாழ வருகை தந்துள்ள அன்பு இறைமக்களே உங்கள் அனைவரையும் இறைமகன் இயேசுவின் விண்ணேற்பு விழா வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

மண்ணக மாந்தர்கள் மீட்படைய வேண்டும் என்ற விண்ணகத் தந்தையின் விருப்பத்தை நிறை வேற்ற இறைமகன் இயேசு இம்மண்ணகம் வந்தார். அவர் நமக்காக இறந்து, உயிர்த்து, விண்ணகம் சென்று நமது நம்பிக் கைக்கு உயிர் தந்திருக்கிறார். அவரது விண்ணேற்பு அவர் உயிர்ப்பில் பெற்ற மகிமையின் முழுமையேயாகும். அவர் தந்தை யின் வலப்பக்கத்தில் வீற்றிருப்பது இயேசுவின் மாட்சிமைக்கும் வல்லமைக்கும் ஓர் அடையாளம்.

ஆண்டவரின் விண்ணேற்றம் அவரது மாட்சியையும், அவர் மேற்கொண்ட திருப்பணியின் நிறைவையும் குறிப்பதோடு பரம தந்தையிடம் நமக்காக பரிந்து பேச அவர் இருக்கிறார் என்ற நம்பிக் கையையும் தருகிறது இன்றைய விழா.

உலகம் உய்ய கிறிஸ்து உலகிற்கு வந்தார். உடன் பிறந்தவராகி உறவு கொண்டார். உள்ளங்களை யெல்லாம் உறவாட வைத்தார். நலன் நாடும் நண்பராகவும், துன்பம் போக்கும் தூயவராகவும், எல்லோருக்கும் எல்லாமுமாக விளங்கினார். அவர் முன்னுரைத் தவாறு தான் உயிர்த்தெழுந்த 40-ஆம் நாள் விண்ணறேற்றம் அடைந்தார். இயேசுவின் விண்ணேற்றம் ஒரு வரலாற்று நிகழ்ச்சி.

இயேசு விண்ணேற்றம் அடைவதற்கு முன் உலகெங்கும் நற்செய்தியை அறிவிக்கவும், அரும் அடையாளங்களைச் செய்யவும் நமக்கு அதிகாரம் தந்துவிட்டு சென்றிருக்கிறார். அவர் தந்த அதிகாரத்தை பயன் படுத்தி இயேசுவின் உண்மையான சாட்சிகளாக வாழ்ந்து, நாம் நம்பியிருக்கும் பேரின்ப வாழ்வை யும், நம் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையையும் மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்து இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

## முதல் வாசக முன்னுரை

இறைமகன் இயேசுவின் விண்ணேற்பு நிகழ்ச்சி இன்றைய முதல் வாசகத்தில் மிகத் தெளிவாகப் படம்பிடித்து காட்டப்படுகிறது. தான் விண்ணகம் செல்லுமுன் தூய ஆவியாரை அனுப்பப்போவதாகவும், அவர் வழியாக தன்னுடைய உதவி தொடரும் என்றும் இயேசு தரும் வாக்குறுதியை இவ்வாசகம் எடுத்துரைக்கிறது. இயேசுவின் விண்ணேற்றத்தையும், அவரது இரண்டாம் வருகையையும் தொடர்பு படுத்தி ஓர் ஆழ்ந்த இறையியல் கருத்தை எடுத்துரைக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

கிறிஸ்துவ அழைப்பைப் பற்றியும், திருஅவையை கிறிஸ்துவோடு இணைத்தும் பவுலடியார் கூறும் ஆழ்ந்த கருத்துக்கள் இன்றைய இரண்டாம் வாசகமாக அருளப் பட்டுள்ளது. தேவ ஆவியானவர் நம் கிறிஸ்தவ அழைப்பின் அருமை பெருமைகளை நமக்கு உணர்த்தி, நம் அகக் கண்களுக்கு ஒளி தருகிறார் என்பதையும், இயேசு கிறிஸ்துவின் பேராற்றலே தேவ ஆவியார் என்பதையும் எடுத்துரைக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) இறைஞ்சுவோருக்கு இரங்கிடும் எம் இறைவா! உலகின் கடையெல்லை வரை உமக்கு சாட்சிகளாய் இருப்போமென உறுதியேற்று, அருட்பணி ஆற்றிவரும் உம் திருஅவையின் தலைவர் எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள், அனைவரும் இவ்வுலகில் உமக்கு சான்று பகரவும், நற்செய்தி விழுமியங்களான அன்பு, நீதி, சமத்துவம் ஆகிய நற்பண்புகளை மக்கள் மனங்களில் விதைத்து அவர்களை நல் வழிப்படுத்தவும், அவர்களுக்கு தேவையான ஆற்றலையும் வல்லமையையும் நல்ல உடல் நலத்தையும் நிறைவாக தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறாம்.

2) உறவை வளர்க்கும் எம் இறைவா! எங்கள் குடும்பங்களை உமக்கு ஒப்புக் கொடுக்கின்றோம். நீர் அனுப்பும் துணையாளரைக் கொண்டு எங்கள் குடும்பங்களில் அன்பும், நட்புறவும் தழைத்திடவும், எமக்கு அடுத்திருப்ப வரை அன்பு செய்யவும், அதன் மூலம் உமது இரக்கத்தின் இறையாட்சியை பறைச்சாற்றவும் எமக்கு ஆற்றலைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) இருந்தவரும், இருக்கின்றவரும், வர இருப்பவருமான அன்பின் இறைவா! நீர் எமக்கு விடுத்திருக்கும் அழைப்பு எத்தகைய எதிர்நோக்கை தந்துள்ளது என்றும், உம் அன்பு மக்களாகிய எங்களுக்கு நீர் அளிக்கும் உரிமைப் பேறு எத்துணை மாட்சி மிக்கது என்பதையும் உணர்ந்து, உமது கட்டளைப்படி வாழ்ந்து, உமக்கு சாட்சிகளாக வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) எம் வாழ்வின் ஒளியும் வழியுமாய் இருக்கும் எம் இறைவா எங்கள் பங்கிலுள்ள இளையோர் அனைவரையும் உமக்கு ஒப்புக் கொடுக்கிறோம். அவர்களின் வாழ்வு ஒளிமயமானதாய் இருக்கவும், அவர்கள் தேர்ந்தெடுக்கும் படிப்பிலும், ஒழுக்கத்திலும் தலைசிறந்து விளங்கவும், உமது உயிருள்ள சாட்சிகளாய் இவ்வுலகில் வலம் வரவும் அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.



# பொன் மொழிகள் காட்டும் வாழ்வின் வழி

மற்றவர்களிடம் நிறையைப் பேசுதல் நன்று
ஆனால் நிறைய பேசாதிருப்பதும் நன்றே

நாம் செவி சாய்க்கும் வரை
கடவுள் அமைதியாகவே இருப்பார்

உங்களால்  பறக்க முடியவில்லை என்றால் ஓட ஆரம்பியுங்கள்
ஓட முடியவில்லை என்றால் நடந்து செல்லுங்கள்
நடக்க முடியவில்லை என்றால் ஊர்ந்து செல்லுங்கள்
எந்தச் சூழலிலும்
அடுத்தகட்ட நகர்வை விட்டுவிடாதீர்கள்
– மார்ட்டின் லூதர் கிங்

வாழ்க்கையில் உயரும்வரை காதை மூடிக்கொள்ளுங்கள்
உயர்ந்த பிறகு வாயை மூடிக்கொள்ளுங்கள்

சின்னஞ்சிறிய செயலையும் மிகச் சிறப்பாக செய்வதே
வெற்றியின் இரகசியம்
– ஜான் டி ராக்ஃபெல்லர்

அறிவு ஆற்றலைத் தரும்
நன்நடத்தை மதிப்பைத் தரும்
– புரூஸ் லீ

மற்றவரை வெல்வது வலிமையல்ல
தன்னை வெல்வதே வலிமையிலும் வலிமை
– லாவோ ட்சு



# திருப்பலி வாசகங்கள்

## பாஸ்கா 7ம் வாரம்

## 21.05.2023 முதல் 28.05.2023

**21.05.2023 - ஆண்டவரின் விண்ணேற்றுப் பெருவிழா - ஞாயிறு**

திருத்தூதர் பணிகள் 1/1-11

எபேசியர் 1/17-23

மத்தேயு 28/16-20

**22.05.2023 - பாஸ்கா 7ம் வாரம் - திங்கள் கிழமை**

திருத்தூதர் பணிகள் 19/1-8

யோவான் 16/29-33

**23.05.2023 - பாஸ்கா 7ம் வாரம் - செவ்வாய்க்கிழமை**

திருத்தூதர் பணிகள் 20/17-27

யோவான் 17/1-11

**24.05.2023 - பாஸ்கா 7ம் வாரம் - புதன்கிழமை**

திருத்தூதர் பணிகள் 20/28-38

யோவான் 17/11-19

**25.05.2023 - பாஸ்கா 7ம் வாரம் - வியாழக்கிழமை**

திருத்தூதர் பணிகள் 22/30, 23/6-11

யோவான் 17/20-26

**26.05.2023 - பாஸ்கா 7ம் வாரம் - வெள்ளிக்கிழமை**

திருத்தூதர் பணிகள் 25/13-21

யோவான் 21/15-19

**27.05.2023 - பாஸ்கா 7ம் வாரம் - சனிக்கிழமை**

திருத்தூதர் பணிகள் 28/16-20, 30,31


யோவான் 21/20-25

**28.05.2023 - தூய ஆவியார் பெருவிழா - ஞாயிற்றுக்கிழமை**

திருத்தூதர் பணிகள் 2/1-11

1 கொரிந்தியர் 12/3-7, 12, 13

யோவான் 20/19-23



# திருக்குறள் வழங்கும் சமூக நெறி

## குறள் 46

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன்

### குறள் விளக்கம்

ஒருவன் அறநெறியில் இல்வாழ்க்கையைச் செலுத்தி வாழ்வானானால், அத்தகையவன் வேறுநெறியில் சென்று பெறத்தக்கது என்ன?

### சிந்தனை

புதிதாக வரப்போகிற மதபோதகரை வரவேற்க தேவாலய வாயிலில் அனைவரும் திரண்டிருந்தனர். ஆலய வாயிலில் ஏழை மனிதன் ஒருவன் படுத்திருந்தான். பலரும் அவனைப் பார்த்து விலகிச் சென்றனர். முக்கியமான நேரத்தில் இவன் வேறு என்று முணுமுணுத்துக் கொண்டனர். பிரார்த்தனை நேரத்திற்கு முன்பாக அந்த மனிதன் எழுந்தான். ஆலயத்திற்குள் நுழைந்தான். தாங்கள் எதிர்பார்த்த போதகர்தான் அந்த மனிதன் என்று தெரிந்து அனைவரும் அதிர்ச்சி கொண்டனர். மேடையேறிய அந்த மனிதர் சொன்னார்,

என் முதல் போதனை என்னவென்று உங்களுக்குப் புரிந்திருக்கும். யாரையாவது எடைபோட்டுக் கொண்டிருந்தால் உங்களால் அவர்களை நேசிக்க முடியாது. நிபந்தனை இன்றி நேசியுங்கள் என்றார்.

ஒரு மனிதன் அறநெறியோடு கூடிய இல்வாழ்க்கையை நடத்துபவன் ஆயின் அவன் வேறு எந்த தர்ம காரியங்களையும் செய்யத் தேவையில்லை. அதுவே இறைவனுக்கு ஏற்புடையதாக ஆகிவிடுகிறது. புனித அன்னை தெரசாள் சொல்வது போல ஜெபிக்கின்ற கரங்களைவிட கொடுக்கின்ற கரங்கள் மேலானது ஆகும்.

வேதாகமத்தில் மத்தேயு நற்செய்தி 5: 23,24 ல், நீங்கள் உங்கள் காணிக்கையை பலிபீடத்தில் செலுத்த வரும்பொழுது உங்கள் சகோதர சகோதரிகள் எவருக்கும் உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால் அங்கேயே பலிபீடத்தின் முன் உங்கள் காணிக்கையை வைத்துவிட்டுப் போய் முதலில் அவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள் பின்பு வந்து உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள் என்று கூறுகிறது. எனவே அறத்தோடு கூடிய இல்வாழ்க்கையே சிறந்தது.





அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்.fspm




திரு.ஜெ.அம்புரோஸ்
கோபிச்செட்டிபாளையம்

# நலம் தரும் இயற்கை வளம்



நலம் தரும் இயற்கை வளம்.
உறவுகளே இனிய வணக்கம்.
இன்றைய நலத்தகவல்.!
நன்னாரி சர்பத்
முப்பது ஆண்டுகளுக்கு முன்பு வரை
நம் சமூகத்தில் வெயிலினை சமாளிக்க அதிகம் கோலோச்சி வந்த பானங்கள்
எவை என்று சிறிது சிந்தித்துப் பார்த்தால்
நமது மண் சார்ந்த பானங்களான
நுங்கு, இளநீர், நன்னாரி, தெளுவு (தெளிவு), நீராகாரம்,
இவற்றில் இளநீரைத் தவிர
மற்றவை அனைத்தும் இன்றைய தலைமுறைக்கு
புதிய பெயர்கள் தான்.
மண் சார்ந்த பானங்கள் தான் தட்ப வெட்பத்திற்கு ஏற்ப
உடலின் தன்மைக்கு ஒத்துச் செல்லக்கூடியது.
நமது அறியாமையில் நாம் மறந்து கடந்து செல்லும்
நம் பானங்களின் அருமையை
இன்னும் 30 வருடங்கள் கழித்தே நாம் உணருவோம்.
எனவே,
நம் மண் சார்ந்த உணவுகளை நோக்கி
காலம் தாழ்த்தாமல் நகர வேண்டும்.

மேலே குறிப்பிட்ட பானங்களில் இன்று
கிட்டத்தட்ட வழக்கொழிந்து விட்ட நன்னாரி அதீத உடல் நலன்களை தரவல்லது.
குறிப்பாக கிட்னி செயல்பாட்டிற்கு மிகவும் உகந்தது.
உடலின் சூட்டினை தணித்து
அதனால் ஏற்படும்
அனைத்து வகையான நோயினையும் கட்டுப்படுத்தக்கூடியது.
நன்னாரி வேரின் சாரில் இருந்து செய்யப்படும் இந்த நன்னாரி சர்பத் காபி, டீ ஆகியவற்றிற்கு மிகப்பெரிய மாற்று.
இது போன்ற வெயில் காலங்களில்
கல்லீரல்இ உணவு செரிமானம் போன்ற எண்ணற்ற சிக்கல்கள் உடலினை பாதிக்கும்.
அவற்றில் இருந்து எளிமையாக தற்காத்துக்கொள்ள
நன்னாரி வேர் சர்பத்தினை தினமும் எடுத்துக் கொள்ளலாம்.
தினசரி காலையும் மாலையும் காபி, டீ ஆகியவற்றிற்கு பதிலாக
இந்த நன்னாரி சர்பத்தினை பருகி வரலாம்.
நன்னாரி சர்பத் செய்வது மிகவும் எளிமையானதும் கூட,
தேவையானவை:
செனஸ் சேர்க்காத ஒரிஜினல் நன்னாரி வேரில் செய்த
நன்னாரி சிரப் 1 டம்ளர்
தண்ணீர் – 3 டம்ளர்
1/2 டம்ளர் எலுமிச்சை சாறு
தேவையான அளவு நாட்டு சர்க்கரை
இவற்றினை கலந்தால் தித்திப்பான நன்னாரி சர்பத் தயார்.
குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை
தினமும் காலையும், மாலையும் இதனைப் பருகலாம்.
ருசியும், ஆரோக்கியமும் மிக்க
நம் பாரம்பரிய பானம் இந்த நன்னாரி சர்பத்.
நன்றி எம் உறவுகளே..!
என்றும் உங்கள் அன்பு சகோதரன்.
ஜே. அன்புரோஸ்.
நலநெறியாளன்




# நூல் அறிமுகம்

**நூலின் பெயர்:**
என்னைப் பின்செல்: நற்செய்தி நூல்களில் சீடத்துவம்


**நூலின் ஆசிரியர்:**
அருட்பணிமுனைவர் ஆ. அலெக்ஸ் ளீனிய்

**வெளியீடு:**
கிளரீசியன் ஊடகப் பணியகம்,சென்னை.

**விலை:**
ரூபாய் 150.

திருமுழுக்கு பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவரும் இயேசுவின் சீடர்களாக வாழவேண்டியவர்கள். இயேசுவின் போதனைகளையும் பணிவாழ்வையும் மையப்படுத்தி வாழ்வை அமைக்க வேண்டியவர்கள். நற்செய்தி நூல்களில் சீடத்துவம் என்ற இந்நூல் நான்கு நற்செய்தி நூல்களிலும் காணப்படும் சீடத்துவம் பற்றிய முதன்மையான கருத்துக்களை, எளிமையான நடையுடன் விளக்கமாகக் கூறுகிறது. இயேசு தனது சீடர்களுக்குக் கொடுத்த பயிற்சிகளையும் போதனைகளையும் அடிப்படையாகக் கொண்டு, சீடர்கள் எத்தகைய அறநெறிகளையும், விழுமியங்களையும் பின்பற்றவேண்டும் எனக் கூறுகிறது.

சிவகங்கை மறைமாவட்ட மேனாள் ஆயர் செ. சூசைமாணிக்கம் அவர்களின் கருத்துப்படி, கிறிஸ்துவின் மனநிலைக்கு ஏற்ப சீடத்துவ வாழ்க்கை வாழஉதவும் வழிகாட்டியாக அமைந்துள்ளது இந்நூல் - சவால்களும், நெருக்கடிகளும் கிறிஸ்தவர்களை அச்சுறுத்தும் இக்காலகட்டத்தில், கிறிஸ்தவ வாழ்வில் நாட்டம் கொண்டோர் அனைவருக்கும் இந்நூல் துணையும் தூண்டுதலுமாய் இருக்கும்.



இந்நூலைப் பெற்று பயனடைய விரும்புபவர்கள் கீழ்க்காணும் முகவரிக்குத் தொடர்புகொள்ளலாம்.

கிளரீசியன் ஊடகப் பணியகம்,
த.பெ.எண் 43,பாரதிநகர் முதல் தெரு,
ஜோதிநகர், மேற்குதாம்பரம்,சென்னை-600 045.
தொலைபேசி: 044 - 2226 0825,
அருள்பணி ச. இஞ்ஞாசியார் CMF
9486645393
அருள்பணி ஆ. ராயப்பன் CMF 8940118893
மின்னஞ்சல்:
artsmediacmf@gmail.com;
claretian.communications@yahoo.com
YouTube: Claretian Communications